**ARTICLE 32 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 83–92

# சங்கப் பாடல்களில் எச்சரிக்கை நிமித்தங்கள்

## Sanga Padalgalil Nannimiththangal

**முனைவர் ரெ. ராதிகா**
உதவிப் பேராசிரியை, தமிழாய்வுத் துறை
தனலட்சுமி சீனி வாசன் நிகர் நிலை பல்கலை கழகம் ஸ்கூல் மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா.
Dr. R. Radhika jayaprakash, Assistant Professor of Tamil
Dhanalakshmi Srinivasan School of arts and Science College, Deemed University, Perambalur
Tamil Nadu, India

**Abstract**

Sangam literature, serving as a repository of the ancient Tamils' way of life, reveals their culture, beliefs, and deep-seated bond with nature. Through specific natural signs, humans were able to anticipate in advance the fortunes and misfortunes they would encounter in their daily lives. These very signs came to be known as ‘Nimithangal’ or omens. From the era of ‘Tolkappiyam’ through the Sangam period, these omens played a pivotal role in the domestic (Akam) and public (Puram) lives of the Tamils. This research paper aims to compile and present the references to omens—specifically auspicious (Nannimittam) signs—found within the Sangam literary corpus, comprising the ‘Ettuthogai’ and ‘Pathupattu’ anthologies; furthermore, it seeks to analyze the underlying human psychology and knowledge of the natural world that inform these beliefs.

It has been established that the people of the Sangam era placed their faith in various omens, such as ‘Virichi’ (listening for auspicious words), ‘Pul’ (the sounds or actions of birds), the chirping of lizards, the cawing of crows, dreams, and shifts in planetary positions. While auspicious omens served as a solace for the heroine in her distress, inauspicious omens acted as warnings for kings embarking on war. This research paper establishes that these elements are not merely superstitions, but rather reflect the profound understanding of nature possessed by the people of the Sangam era, as well as the psychological need that served as an outlet for their emotional expressions.

**Keywords:** Sangam Literature, Omens, Virichi, Avian Omens, Good Omens, Tamil Way of Life.

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டையத் தமிழர்களின் வாழ்வியல் கருவூலமாகத் திகழும் சங்க இலக்கியங்கள், அவர்களின் பண்பாடு, நம்பிக்கை மற்றும் இயற்கையுடனான பிணைப்பை வெளிப்படுத்துகின்றன. மனிதன் தன் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் நன்மைகளையும் தீமைகளையும் இயற்கையின் சில அறிகுறிகள் மூலம் முன்கூட்டியே உணர்ந்து கொண்டான். இவ்வறிகுறிகளே ‘நிமித்தங்கள்’ அல்லது சகுனங்கள் எனப்பட்டன. தொல்காப்பியக் காலம் தொட்டு சங்க காலம் வரை இந்நிமித்தங்கள் தமிழர்களின் அக, புற வாழ்க்கையில் மிக முக்கியப் பங்காற்றியுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரை, சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களில் பயின்று வந்துள்ள நிமித்தங்கள் (நன்னிமித்தம்) பற்றிய பதிவுகளைத் தொகுத்துக் காண்பதையும், அவற்றின் பின்னணியில் உள்ள மக்களின் உளவியல் மற்றும் இயற்கை சார்ந்த அறிவை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

சங்க கால மக்கள் விரிச்சி கேட்டல் (நற்சொல்), புள் (பறவைகளின் ஒலி/செய்கை), பல்லி கத்துதல், காகம் கரைதல், கனவுகள் மற்றும் கோள்களின் நிலை மாறுபடுதல் போன்ற பல்வேறு நிமித்தங்களை நம்பியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. தலைவியின் ஆற்றாமைக்கு மருந்தாக நன்னிமித்தங்களும், இவை வெறும் மூடநம்பிக்கையாக மட்டுமில்லாமல், சங்க கால மக்களின் ஆழ்ந்த இயற்கையறிவையும், அவர்களின் மன உணர்வுகளுக்கு வடிகாலாக அமைந்த உளவியல் தேவையையும் பிரதிபலிக்கின்றன என்பதை இவ்வாய்வுக் கட்டுரை நிறுவுகிறது.

**திறவுச் சொற்கள்:** சங்க இலக்கியம், நிமித்தங்கள், விரிச்சி, புள், நற்சகுனம், தமிழரின் வாழ்வியல்.

## முன்னுரை

மனித நாகரிகத்தின் தொடக்கக் காலம் தொட்டே, இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் சுற்றியுள்ள நிகழ்வுகளைத் தன் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வழக்கம் கொண்டிருந்தான். அவ்வகையில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் வாழ்வியலைத் தெள்ளத்தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும் சங்க இலக்கியங்களில் 'நிமித்தங்கள்' எனப்படும் சகுனங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

'நிமித்தம்' என்பது ஒரு செயல் நடப்பதற்கு முன்னரோ அல்லது நடக்கும் போதோ தோன்றும் அறிகுறியாகும். அது நன்மையையோ அல்லது தீமையையோ முன்கூட்டியே உணர்த்தும் இயற்கையின் சிக்னலாகக் கருதப்பட்டது. தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே நிமித்தம் பார்த்தல் என்பது தமிழர்களின் மரபாக இருந்துள்ளதை "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்..." என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்.

சங்க கால மக்கள் பறவைகளின் ஒலி (புள்), விலங்குகளின் செய்கை, பல்லி கத்துதல், விரிச்சி கேட்டல் (நற்சொல்), கனவுகள் மற்றும் கோள்களின் நிலை போன்றவற்றைக் கொண்டு வரவிருக்கும் நன்மைகளையும் தீமைகளையும் எவ்வாறு கணித்தார்கள் என்பதையும், அவர்களின் நம்பிக்கைக்குப் பின்னுள்ள வாழ்வியல் உண்மைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பறவை

பறவைகள் ஒலிப்பதையும், அவை பறப்பதையும் கொண்டு பல்வேறு நிமித்தங்கள் உருவாயின. "**புதுப்புள் வரினும் பழம்புள் போகினும் தீய நிமித்தம்**" என்று ‘புறநானூறு’ கூறுகிறது. ஆநிரைகள் (பசுக்கூட்டங்கள்) இருக்கும் காட்டில் **காரியென்னும் பறவை** கத்தினால், அது ஒரு தீய நிமித்தமாகக் கருதப்பட்டது. இப்பறவை உட்புகுந்ததால் தீமை வரும் என்று ஆநிரையிலிருந்த நிமித்தக்கன் கூறினான் என *சீவக சிந்தாமணி* குறிப்பிடுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. இக்காலத்திலும் ஒருவர் வெளியே புறப்படும்போது விலங்கு அல்லது பறவைகளில் எது எதிரில் வந்தால் என்ன நிமித்தம் என்று கருதும் வழக்கம் காணப்படுகிறது.

### புள் ஓர்த்துக் கழிதல்

போர்க்களமானாலும் சரி, காதற்களமானாலும் சரி, நிமித்தம் பார்த்துப் புறப்படுவது போலவே, பொருளும் பரிசிலும் பெற விழைந்த புலவரும் கூத்தரும் நிமித்தம் பார்த்தே புறப்பட்டனர். பரிசில் பெற்ற நன்னனிடம் இருந்து திரும்பும் ஒரு கூத்தன், வழியில் கண்ட மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்துகிறான். அவர்கள் செல்ல வேண்டிய வழியைக் கூறி வரும்போது, "இரவு நேரத்தில் நடந்து வந்த வருத்தம் போக்கும்படி புல்வேய் குரம்பையிடத்து (குடிசையில்) தங்குவீர். சில நாட்கள் தங்கிய பின்னர், இராக்காலம் நீங்கிய விடியற்காலத்து நிமித்தம் பார்த்துப் போவீர்" என்கிறான். இதனை,

"புலரி விடியல் புள் ஓர்த்துக் கழிமின்" - (மலைபடு. 448)
என்னும் 'மலைபடுகடாம்' தொடரால் நன்கு அறியலாம்.

இதனைத் தொடர்ந்து பிற்காலத்தில் எழுந்த 'பிரபுலிங்கலீலை' கூறுவது போல, கூத்தனும், பரிசில் பெறச் செல்லும் மற்றொருவனைக் கண்டபோது மகிழ்ந்து, "என்னைப் பார்த்ததினாலேயே நீவிர் புறப்படுகின்ற பொழுது நுமக்கு வரும் ஆக்கத்தை எதிர்கொண்டு நின்று நன் முகூர்த்தத்தோடு நன்னிமித்தத்தையும் உடையவராக இருந்தீர்', எனப் பாராட்டுகின்றான். இங்ஙனம் புலவன் மற்றொரு புலவனை ஆற்றுப்படுத்தும் பொழுது, 'நன்னிமித்தம் பார்த்துப் போவாயாக!' என்று கூறுவதிலிருந்து அக்காலத்திய நிலையும் நன்கு புலனாகிறது.

## புள்ளும் பொழுதும் பழித்தல்

கழைதின் யானையார் என்னும் சங்கப் புலவர் வரையாது சுரக்கும் கொல்லிமலைத் தலைவனாகிய வல்வில் ஓரியைப் பாராட்டிப் பாடிய புறநானூற்றுப் பாடலில், இரவலர் புரவலரிடம் புள்ளும் பொழுதும் பார்த்துப் புறப்பட்ட செய்தியினைக் கூறுவர். இரவலர் பரிசில் பெறாதபோது தாம் நாடி வந்தவரைப் பழித்துப் பேசார். தாம்புறப்பட்ட நேரத்தையும் புள் நிமித்தத்தையுமே பழிப்பர். 'எனக்கு இல்லையெனினும் உன்னைப் புலவேன். வானம்போல வரையாது சுரக்கும் வள்ளியோய் நீ வாழி' என்று புறநானூற்றுப் புலவர் வாழ்த்துகின்ற காலத்திலும் நன்னிமித்தமும் தீ நிமித்தமுமே வெற்றிக்கும் தோல்விக்கும் காரணம் எனக்கருதும் உள்ள நிலையையும் உணரமுடிகிறது.

புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர் - (புறம். 204)
என்னும் பகுதி இதனை நன்கு தெளிவுறுத்தும்.

## விரிச்சிக் கேட்டல்

செருக்களம் சென்று வந்த செம்மல் மார்பிலே புண்பட்டு மயங்கிக் கிடக்கின்றான். பெருவீரம் தந்த வெற்றிப் பரிசிலான விழுப்புண்களால் அவனுடைய இறப்பு இன்றோ நாளையோ என வருந்தும் மகளிரின் துன்பநிலை, அந்நிலையிலும் அருள் நிறைந்த அவ்வறவோனைப் பார்க்கப் பாணனும், விறலியும் துடி கொட்டுவோனும் அவனகத்தின் புறத்தே காத்துக் கொண்டுள்ளனர். இந்நிலையில் தலைவி தீ நிமித்தங்களைக் கண்டு புலம்புகின்றாள்.

"என்னை மார்பிற் புண்ணும் வெய்ய
—----------------------------------------
நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்" - (மேலது. 280)

இப்பாடலில் தலைவி, நண்பகற்போதில் முரலாத தும்பிகள் அப்பொழுது ஒலித்தலையும், இல்லிலே ஏற்றி வைத்த விளக்கு நில்லாது அணைவதையும், உறங்காது பன்னாள்கள் அவனருகே இருந்த அவள் கண்கள் மூடுவதையும் அச்சத்தைத் தரும் கூகை கூவுவதையும் தீ நிமித்தங்களாகக் கருதிப் புலம்புகிறாள். நெல்லும் நீரும் எறிந்து விரிச்சி கேட்டு இவன் பிழைப்பான் என்று கூறிய செம்முது பெண்டிரின் சொல்லும், இந்நிமித்தங்களால் குறைபாடடைவதை அவள் வருந்திக் கூறுகிறாள். இறக்குந் தறுவாயில் துன்புறுவோர் பிழைக்கும்பொருட்டு நெல்லும் நீரும்

எறிந்து முதுபெண்டிர் விரிச்சி கேட்கும் நிமித்தமும் வழக்கமும் அந்நாளில் இருந்தது என்பதும் இதனால் புலனாகிறது.

## ஓந்தியும் நன்னிமித்தமும்

ஓந்தி நன்னிமித்தத்திற்குரியது என்பதைக் குறுந்தொகைப் பாடலொன்று கூறும். பொருள்வயிற் பிரிவினால் தலைவனைப் பிரிந்த தலைவி தன் காதலன் பாலைநிலத்துச் சென்ற காட்சியினைக் கூறும்போது, 'தலைவன் கருக்கரிவாளைப் போன்ற முதுகையுடைய முதிய ஆண் ஓந்தியானது வழிச்செல்லும் மனிதர்கள் நிமித்தமாகக் கொள்ளும்படி தங்குகின்ற பாலை நிலத்திற் சென்றனர்' என்பதனால் ஓந்தி நன்னிமித்தங் காட்டுவது என்பது போதரும்.

"நாவிசிச் சிலியோந்தி தான்
வலமாயின் வழிப்பயண மாகை நன்றாம்" - (அறப்பளீசுர சதகம்)

என்னும் பிற்காலத்திய அறப்பளீசுர சதகப் பாடலும் இதனை நன்கு வலியுறுத்தும்.

## காக்கையும் நன்னிமித்தமும்

காக்கை கரைந்தால் விருந்து வரும் என்று எண்ணுகின்ற வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. குறுந்தொகையில் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய பாட்டு இதனை அறிவிக்கும்.

"விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" - (குறுந். 20)

என்பது அப்பாடல் தொடராகும். ஐங்குறுநூற்றிலும் காக்கை கரைவதை நன்னிமித்தமாகக் கொண்டமை காணப்படுகிறது. இத்தகைய நம்பிக்கையினைப் பறவைகள் பறப்பதையும் ஒலிப்பதையும் நிமித்தங்களாகக் கருதியமையைப் பழந்தமிழரைப் போலப் பண்டைய கிரேக்கர்களும் உரோமானியர்களும் கொண்டிருந்தனர். பறவைகள் குறித்துப் பழந்தமிழர் கொண்டிருந்த நம்பிக்கையினை மார்க்கோ போலோவும் தம் பயணக் குறிப்பில் சுட்டியிருப்பதை இங்குக் கருதுதல் தகும்.

## பல்லியும் பலனும்

வினைமுற்றி மீண்ட தலைமகன் பேரார்வத்தோடு தலைவியிடம் செல்லுகின்றான். அப்போது தேர்ப்பாகனிடம் பின்வருமாறு உரையாடுகின்றான்: 'என் அன்பு வருகையினை எதிர்நோக்கி என் இல்லத் தலைவி இல்லத்தின்கண் நிமித்தம் கேட்டற்குரிய இடத்திலே நிற்கின்றாள். நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து நன்னிமித்தத்தைக் குறிக்கும் பக்கத்திலே பல்லி சொல்லுந்தோறும் நின்று மகிழ்கின்றாள்.'

"பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள்" - (அகம். 9)

என்று அகநானூறு இதனை அழகுறக் கூறும்.

## பல்லியும் பன்றியும்

மாந்தர் நிமித்தம் பார்த்துச் செயலாற்றியதைப் போன்றே விலங்கினமும் நிமித்தம் பார்த்துச் செயலாற்றியதைக் கூறும் செய்தியும் சங்க இலக்கியத்தில் உண்டு. முதிய மேட்டுக் கொல்லையில் தழைத்து விளங்கியது சிவந்த தினைப் பயிர். அப்பயிர்களின் கதிர்களைத் தின்ன விழைந்த பன்றி, பல்லி சொல்லும் நன்னிமித்தம் பார்த்துப் புறப்பட்டதாம்.

"பகுவாய்ப் பல்லி பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி" - (மேலது 88)

என்னும் அகநானூற்றுப் பாடல் இதனை அழகுற உணர்த்தும். பொறி வைக்கும் வழிகளை உணர்ந்த பன்றிக் கூட்டம் அவ்வழிகளில் பயந்து பயந்து பார்த்துச் செல்வது இயற்கையாகும். இதனைப் பல்லியின் குரல் கேட்டுக் காட்டுப் பன்றி விளைபுனத்தில் நுழைவதாகக் கற்பனையாகக் கூறினர். இதேபோன்று நற்றிணை (98) பாடலிலும் காட்டுப்பன்றி பல்லி சகுனம் பார்த்துப் பொறியில் மாட்டாது தப்பித்துக் கொண்டதாகக் கூறுவதும் கருதத்தக்கது. இவை கவிஞருடைய உயர்ந்த கற்பனையாயினும் அக்காலத்திய இயல்பினை அறிந்து கொள்ள ஏதுவாகிறது.

## பல்லியின் பெருமை

தலைவன் பிரிந்து சென்ற காட்டின் இயல்பைக் கூறவந்த தலைவி ஒருத்தி, 'செல்லுகின்ற வழிப்போக்கர்க்குமேல் வந்துறும் நிகழ்ச்சிகளை அறிவிக்கின்ற சிறிய செம்மையுடைய நாவினையும், மணியோசையைக் கேட்டாற் போன்ற தெளிந்த குரலையும், சோதிடம் கூறுகின்ற வாயினையுமுடைய பல்லிகளையுடைய காடு' என்கிறாள். இதனை அகநானூறு,

கள்ளி முள்ளரைப் பொருந்திச் செல்லுநர்க்கு
உறுவது கூறுஞ் சிறுசெந் நாவின்
மணியோர்த் தன்ன தெண்குரற்
கணிவாய்ப் பல்லிய காடிறந் தோரே" - (அகம். 151)

என்று கூறும். பல்லி நன்மையாயினும் தீமையாயினும் நடுநின்று கூறுதலின் 'செந்நா' என்று கூறினாள் போலும்.

## பல்லியும் பற்றுக்கோடும்

ஆறுதல் கூறும் அன்பு மொழிகளே துன்பத்தில் வருந்துவோர்க்கு அருமையான அரவணைப்பாகும். அவையே அவர் தம் உயிரின் பற்றுக்கோடாகவும் அமையும். நோயுற்றுத் துடிக்கும் நோயாளர்க்கு மருந்தினும் மாமருந்தாய் அமைவன மருத்துவரும் மற்றையோரும் கூறும் உள்ளன்பு மொழிகளே ஆறுதலுரைகளே. அவையே அவர்களுக்கு உயிர்ப்பும் உணர்வும் தருவன. தலைவனைப் பிரிந்த தலைவிக்கோ வினைதீர்க்கும் மாமருந்தாய் அமைந்தது பல்லியின் நிமித்தமே. ஒவ்வொரு நாளும் சுவரிலே வட்டங்கீறிப் பார்த்துப் பார்த்து எழுது சுவர் நனையுமளவுக்குக் கண்ணீர் விட்டு அழுதவள் தலைவி. அவ்வன்புடைத் தலைவியின் நலத்தை நினைந்து இரங்கித் தன் நெஞ்சிற்குச் சொல்லுகிறான் தலைவன்:

செய்குறி ஆழி வைகநே றெண்ணி
—-----------------------------------------
உள்ளுதொறு உம் பல்லி
புள்ளுந் தொழுதுறைவி" -(மேலது 351)

'பிரிவாற்றாது, வருந்துகின்ற தோளினது மெலிவைத் தீர்க்கும் மருந்து இது என்று நினைத்து, பல்லியின் சொல்லை நன்னிமித்தமாகக் கொண்டு, அது சொல்லுந்தொறும் தன்னைக் கை கூப்பித் தொழுது, அந்நிமித்தம் பற்றுக் கோடாக உயிர் வாழ்கிறாள் தலைவி' என்பது தலைவன் கூற்று. 'புள்ளுந் தொழுதுறைவி' என்னுந் தொடரால் அவளுடைய துன்பநிலையும்

அவள் அந்நிமித்தத்தைப் பற்றுக் கோடாகக் கொண்ட உண்மை நிலையும் நன்கு விளங்கும்.

## பல்லியும் பாங்கொத்திசைத்தல்

தலைவன் தான் கடந்து செல்லவிருக்கும் காட்டின் இயல்பை முன்னரே கூறியிருந்தான். இல்லார்க்கு அருள் புரியப்பேணாரை அழித்துப் பொருள் தேடி. அப்பொருளால் புணர்ச்சி பெறுவேன் எனக் கூறிச் சென்றான் தலைவன். அவன் வாராததை எண்ணி மயங்கிய தலைவி அவன் அன்பு மொழிகளை நினைவில் கொண்டாள். "பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறும், அன்பு கொண்ட மடப்பிடியின் வருத்தத்தை மென் சிறகால் ஆற்றும் புறவும், இன்னிழல் இன்மையால் வருந்தும் மடப்பிணைக்குத் தன்னிழலைத் தந்தளிக்கும் கலைமானும் வாழ்கின்ற காட்டினைக் கடந்த நிலையிலுமா தலைவனுக்கு என் நினைவு வரவில்லை? அருளுணர்வினையும் அன்புணர்வினையும் காட்டும் அக்காட்சிகள் என்னை அவர்க்கு நினைவுறுத்துமே! என் அழகு நலம் கெடுமுன் அவர் வருதல் உறுதி! இதோ, பல்லியும் பாங்கொத்திசைத்தது! என் மையுண்கண்ணும் இடந்துடித்தது" என நிமித்தம் அறிந்து மகிழ்ந்தாளாம்.

"பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணும் ஆடுமா லிடனே" - (கலித். 11)

என்னும் கலித்தொகைப் பாடற் பகுதி காதல் நெஞ்சத்தின் கனிவையும் நன்னிமித்தமறிந்து மகிழும் நற்செய்தியையும் கூறும். பல்லி பாங்கொத்திசைக்கும் நிமித்தத்தை இன்னும் சில பாடல்களிலும் நாம் காணலாம்.

## பழந்தமிழரின் விரிச்சி (நன்னிமித்தம்)

விரிச்சி என்பது நற்சொற் கேட்டலாம். அதாவது ஒன்று நன்றாமோ தீ தாமோ என்று அறிய விரும்புவார் ஊர்ப் புறத்தே சென்று, நெல்லும் மலரும் தூவித் தெய்வம் பரவி, அயலிலே உண்டாகும் ஏதிலார் சொல்லை ஓர்ந்து நிற்பர். அங்ஙனம் நின்ற காலை அயலில் எழும் சொல் தம் கருத்திற்கு இயைபுடையதாய வழி நன்றாம் என்றும் முரணியவழி தீதாம் என்றும் கொள்வர். இதனை,

"நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்" - (முல்லை பாட்டு, 7-18)

எனவரும் *முல்லைப்பாட்டுப்* பகுதியால் இதனை இனிதுணரலாம்.

## விளக்கம்

போர்புரிய விரும்பிய அரசர்கள் முதலில் பகைவரின் ஆநிரைகளை (பசுக்கூட்டங்களை)க் கைக்கொள்வது வழக்கம். அப்போது வெற்றி கிடைக்குமா என்பதனை அவனுடைய படைவீரர்கள் அருகிலுள்ள பாக்கத்தில், மக்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, அவர்களறியாமல் சொற்கேட்கும் அளவில் நின்று, அவர்கள் கூறும் சொற்களை நிமித்தமாகக் கொள்ளுவர். இதனைத் தொல்காப்பியம் 'பாக்கத்து விரிச்சி' என்றும் கூறும். புறப்பொருள் வெண்பா மாலையும்,

"வேண்டிய பொருளின் விளைவு நன்கறிதற்கு

ஈண்டிருள் மாலைச் சொல் லோர்த்து" - (புறப். பொ. வெ. மா. வெட்சி. 5)

என்று கூறுவதும் ஈண்டுக் கருதத்தக்கதாகும். 'விரும்பிய பொருளின் ஆக்கத்து அழகுணர்தற்குச் செறியும் இருண்ட மாலையிடத்து நற்சொற்கேட்டல்' என்பர் இதன் உரைகாரர்.

## புள்ளும் விரிச்சியும்

இணைபிரியாது வாழ்ந்த இல்லறத் தலைமகனும் தலைவியும் பிரிய நேரிடுகிறது. தலைவனைப் பிரிந்த தலைவி வருந்துகிறாள், வாடுகிறாள், சுணங்கு பூத்த அணங்காகிறாள். எனவே, 'வெற்றி பொருந்திய கொற்றவைக்குப் பலிக்கடனும் பூணோம், கைந்நூலும் கட்டோம்' என்று வருந்திக் கூறுகிறாள்.

"புள்ளும் ஓரம் விரிச்சியும் நில்லாம்
உள்ளது முள்ளா மன்றே தோழி" -( குறுந். 218)

என்று கூறுவதிலிருந்து, தலைவனைப் பிரிந்துறையும் மகளிர் காப்பு நூல் கையிற் கட்டி, நோன்பு பூண்டு 'புள்ளும் விரிச்சியும்' கேட்பர் என்பது புலனாகும். தலைவியின் காதல் மாண்பும், அன்புடை நெஞ்சமும் இதனால் இனிதே புலனாகின்றன. புறத்திணையில் மட்டுமின்றி அகத்திணையிலும் இக்குறி கேட்கும் வழக்கம் இருந்ததும் நன்கு தெளிவாகும். இங்ஙனம் விரிச்சி கேட்டு நின்றதை நற்றிணையிலும், புறநானூற்றிலும் மேலும் காணலாம்.

## பெண்ணியல் கூறும் நன்னிமித்தம்

மாந்தரின் உடலில் ஏற்படும் குறிகள் கண்டும் பழந்தமிழர் நிமித்தங்களைக் கருதினர். தலைவன் தலைவியினைப் பிரிந்தான்; காலமும் நீண்டது. அவன் குறித்த பருவ வரவின் கண்ணும் வராமையினை எண்ணி, அவன் அன்புருவை நினைந்து வருந்துகின்றாள் தலைவி. அவள் மேனியியல்பை அறிந்த தோழி அவளை ஆற்றுவிக்கின்றாள். "வேந்துவிடு தொழிலின்கண் சென்ற தலைவன் வெற்றியுடன் முடித்து விரைந்து வருவதை நின் பெண்ணியல்பால் கண்டனன், கவலைற்க" என நிமித்தக் குறிகள் கூறி ஆற்றுவிக்கின்றாள். கண்ணாடல், தோள் இடம் துடித்தல், நுதலொளி சிறத்தல் முதலிய பெண்பாலுக்கு உரிய குறிகள், 'பல்லாற்றானும்' என்பதற்குத் தலைமகனோடு உடன் சென்று மீண்டோர் கூறுவனவும் நன்னிமித்தம் பிறவும் என்பர். 'காதற் கொழுநற்களாவாகும் நன்மை தீமைகள் மகளிர் மேனிக்கண் தோன்றும் சில குறிகளால் உணரப்படும்' என்பது பற்றி, பெண்ணியல் காமர் சுடர் நுதல் விளங்கும் என்றாள் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள். இதனை,

"வேந்துவிடு விழுத்தொழில் எய்தி ஏந்துகோட்டு
அண்ணல் யானை அரசுவிடுத் தினியே
எண்ணிய நாளகம் வருதல் பெண்ணியல்
காமரு சுடர்நுதல் விளங்கும்
தேமொழி அரிவை தெளிந்திசின் யானே" - (ஐங். 466)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் அழகுற விளக்கும்.

## வளை செறிதல்

ஐங்குறுநூற்றில் தலைவன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி, அதுகேட்டு ஆற்றாளாகிய தலைமகளுக்குத் தோழி தான் கண்ட நற்குறிகளைக் கூறி, "தலைவன் விரைவில் வந்து உன்னை வரைவான்

(திருமணம் செய்வான்), கவலைப்படாதே" என ஆற்றுவிக்கின்றாள். அப்பொழுது அவள்,

“நுண்ணேர் புருவத்த கண்ணும் ஆடும்
மயிர் வார் முன்கை வளையுஞ் செறூஉம்
களிறுகோட் பிழைத்த கதஞ்சிறந் தெழுபுலி” - (மேலது. 218)

என்று கூறும் அழகிய செஞ்சொற் கவியில், நுண்ணிய புருவத்தை உடைய கண் துடித்தலையும், மயிர் ஒழுங்கிய முன்கையில் அணிந்த வளைகள் நெகிழாது செறிதலையும் நன்னிமித்தங்களாகக் கூறுகின்றாள். பெரும்பாலும் அகத்துறையில் உளவியலுடன், ஆற்றாது புலம்பும் தலைமகளுக்கு நன்னிமித்தக் குறிகளைக் கூறி, அவளை ஆற்றுவிப்பது தோழியின் அறிவாற்றலுக்குச் சான்றாகத் திகழ்வதோடு, அவளது உளவியலறிவும் உலகியலறிவும் வெளிப்படுகிறது. இங்ஙனம், ‘வளை செறிதல்’ நன்னிமித்தம் என்பதைக் குறுந்தொகை கூறுவதும் கருதத்தக்கது:

பெண்டிர்க்கு இடக்கண், இடது தோள் துடித்தல் நன்மையின் நிமித்தம் என்பதைக் கலித்தொகையும் கூறும். கண்ணகி கருங்கண்ணும் மாதவி செங்கண்ணும் இடமும் வலமும் துடித்த செய்தியினை இந்திரவிழவூரெடுத்த காதை இனிது கூறும். கண்ணகிக்குக் கோவலனின் கூட்ட முண்மையின் இடமும், மாதவிக்குப் பிரிவுண்மையின் வலமும் துடித்தன என்பர். ஆயர் ஊதுகின்ற குழலோசை அன்புடைய கேள்வனை நமக்குத் தருகின்ற நன்னிமித்த ஓசை கூறுவதாகக் கலித்தொகை கூறும்.

## விளக்கும் வெற்றியும்

இவைபோன்ற நிமித்தக்க குறிகளேயன்றி கொழுந்து விட்டெரியும் ‘ஒளிச் சுடரும்’ நன்னிமித்தத்தைக் காட்டும் குறி எனப் புறப்பொருள் வெண்பாமாலை புகழ்கிறது. சுழல்காற்று சூறாவளியாக வீசத் தானைப் படையினருக்கு நன்னிமித்தம் தோன்றுகிறதாம். பெருங்காற்று வீசிய போதும் வலமாகச் சுழன்றெழுந்து சோதி உயர்ந்து எரிகிறது. எனவே, விளக்கின் மிகுந்த ஒளி வேந்தற்கு வெல்நெறியைக் காட்டுகின்றதாம்.

“அளப்பருங் கடற்றனையான்
விளக்குநிலை விரித்து ரைத்தன்று” - (பு. பொ. வெ. மா. 200)

என்னும் கொளுவிற்கு ஏற்ப, இப்பாடலைச் சான்று காட்டுவர் புறப்பொருள் வெண்பா மாலையார்.

தவமும் நோன்பும்

சங்ககால மக்கள் தவம் செய்வதிலும் நோன்பு இருப்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

“நலமாண் எயிற்றி போலப் பலமிகு
நன்னலம் நயவர வுடையை
என்நோற் றனையோ? மாவின் தளிரே” -(மேலது, பா.365)

தலைவன், “மாவிற்கு தளிரே! கூட்டமான விலங்குகளைத் தொலைத்துத் தன் தமையன்மார்கொண்டு வந்த நிணமான் தசையினைக் கவர வருகின்ற பறவைகளை ஓட்டும் பெண்மை நலம் உடைய எயிற்றியைப்போல், பலவாய் மிக்க நலம் யாவரும் விரும்பும்படி பெற்றுள்ளாய்!

## நல்ல நிமித்தம் காணுதல்

தலைவன் மணம் பேசி சான்றோரை அனுப்பத் தலைவியின் சுற்றத்தார் மறுத்தனர். அதைக் கேட்டு, ‘இஃது எப்படி முடியுமோ?’ என்று வருந்திய தலைவிக்குத் தோழி தனக்கு நற்கறி செய்யக் கண்டு, ‘விரைவில் வந்து மணந்து கொள்வான்’ எனக் கூறுகிறாள்.

நுண்ணேர் புருவத்த கண்ணும் ஆடும்
-----------------------------------------------
பெருங்கல் நாடன் வருங்கொல் அன்னாய்” - (மேலது, பா.218)

இப்பாடலின்படி தோழி தனது புருவத்தை உடைய இடக்கண் துடிக்கும். இடக்கண் துடித்தல் பெண்டிர்க்கு நன்னிமித்தம் மயிர் ஒழுக்கையுடைய முன்கை. நெகிழ்வு நீங்கிப் பொருந்தும். களிறு கொள்வதில் பிழைபட்ட புலி சினம் மிக்கு முழங்கும். மலை நாடன் எனக் கூறியதால், தம் சுற்றத்தார் மணந்து கொள்வதை மறுத்தமை அறிந்து கண் கலுழ்ந்து மேனி மெலிந்து ஆற்றாத தலைவிக்கு உள்ளுறையால் தலைவனின் ஆண்மைச் சிறப்பைச் சொல்லி ஆற்றுவிக்கலானாள். அவள் இடக்கண் துடித்தது கை வளை செறிந்தது என்பன நன்னிமித்தங்கள், எனவே இவற்றைப் புலப்படுத்தித் தலைவன் மணந்து கொள்வான் என்று தெளிவித்தாள். இது அக்காலத்தில் நிமித்தம் பார்க்கும் வழக்கத்தை எடுத்து இயம்புகிறது.

## தொகுப்புரை

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்க காலத் தமிழர்கள், சுற்றியுள்ள உயிரினங்களின் அசைவுகளையும் மாற்றங்களையும் கூர்ந்து கவனித்துத் தங்களின் வாழ்வியலோடு தொடர்புபடுத்திக் கொண்ட உயரிய சிந்தனையின் வெளிப்பாடே நிமித்தங்கள் ஆகும். அறிவியல் வளர்ச்சியற்ற காலக்கட்டத்தில், மனித மனத்திற்கு நம்பிக்கையூட்டும் ஒரு வாழ்வியல் உத்தியாக இந்நிமித்தங்கள் திகழ்ந்துள்ளன என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

சங்க இலக்கியங்களை ஆழமாக நோக்கும் போது, நிமித்தங்கள் என்பவை வெறும் மூடநம்பிக்கைகளாக மட்டும் பார்க்கப்படவில்லை; அவை மக்களின் அக வாழ்விலும் புற வாழ்விலும் மிகப்பெரிய உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை அறிய முடிகிறது. தலைவனின் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தலைவிக்குக் காகம் கரைதலும், பல்லி சொல்லும் நிமித்தமும் பெரும் ஆறுதலைத் தந்துள்ளன. அதேபோல, போருக்குச் செல்லும் மன்னர்களுக்கு விரிச்சி கேட்டலும், கோள் நிலைகளும் வழிகாட்டியாக அமைந்துள்ளன.

ஆகவே, சங்க காலத் தமிழர்கள் இயற்கையைத் தங்களின் ஒரு பகுதியாகவே கருதினர். இயற்கையில் ஏற்படும் மாற்றங்களை நுட்பமாகக் கவனித்து, அதன் மூலம் தங்களின் எதிர்கால நிகழ்வுகளை ஓரளவிற்கு யூகித்து வாழும் கலை அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அறிவியல் வளராத அக்காலத்தில், மனித மனத்திற்கு நம்பிக்கையையும், எச்சரிக்கை உணர்வையும் ஊட்டிய ஒரு வாழ்வியல் கருவியாகவே 'நிமித்தங்கள்' விளங்கியுள்ளன என்பது திண்ணம்.

## துணைநூற் பட்டியல் (References)


1. இராகவையங்கார், இரா (உ.ஆ). பத்துப்பாட்டு (மூலமும் உரையும்). ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, பதிப்பு 2021.
2. சாமிநாதையர், உ.வே, சிலப்பதிகாரமும் மூலமும், அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையும், பதிப்பு 1944
3. சுப்ரமணியன், ச.வே, தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003
4. நாராயணசாமி ஐயர், அ. நற்றிணை நானூறு. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 600 018, மறு அச்சு, 2001.
5. பாக்யமேரி. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு. பூவேந்தன் பதிப்பகம், சென்னை, 600 004, பதிப்பு, 2019.
6. மோகன், இரா. (உ.ஆ). முல்லைப்பாட்டு. நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிட்., சென்னை, பதிப்பு, 2014.